ஆ: தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும் எம்
தேசம் எங்கும் குண்டு வந்து வீழும் 2
கன்னி மனம் மெல்ல மெல்ல மாறும் அவள்
கையில் குட அயுதங்கள் ஏறும்

பெ: நிலவு வந்து பொழியும் நேரம் நீ வரவில்லை நான்
நீண்டநேரம் காத்திருந்தேன் பதில் வரவில்லை 2
ஊர் முழுதும் ஓலம் நான் உறங்கி வெகு காலம் 2
உறங்கி வெகு காலம் நீ ஓடி வந்தால் போதும்

ஆ: காவலுக்கு வந்து பேய்கள் கடிக்கும் நாளையில்
ஒரு காதல் என்ன மாலையென்ன இந்த வேளையில் 2
எங்கள் புலிவீரர் அவர் இருக்கும் இடம் போறேன் 2
இருக்குமிடம் போறேன் தமிழ் ஈழம் வந்தால் வாறேன்

பெ: தென்றல் வந்து தொட்டு என்னை கேலி செய்தது
நீ சென்ற இடம் சொன்ன பின்பு வேலி போட்டது 2
காலம் வந்து சேரும் புலி களத்தில் வாகை சூடும் 2
களத்தில் வாகை சூடும் என் கழுத்தில் மாலை ஆடும்

ஆ: தங்கமேனி நொந்து ஈழத்தாய் அழுகின்றாள்
எம் தலைவன் இந்த நிலையைப் பார்த்து தான் உருகின்றார் 2
எங்கள் மேனி சாகும் இல்லை எதிரி ஆவி போகும் 2
எதிரி ஆவி போகும் தமிழ் ஈழம் வந்து சேரும்

பெ: உன்னை நெஞ்சில் தூங்க வைத்து பாட்டுப்பாடுவேன்
எம் உரிமைக்காக நானும் வந்து படையில் சேருவேன் 2
வேங்கை தோர்ப்பதில்லை நம் வீரர் சாவதில்லை 2
வீரர் சாவதில்லை நம் விடிவு தூரம் இல்லை

இசைத்தட்டு : களத்தில் கேட்கும் கானங்கள்
பதிப்பகம் : அகம்